| | | |
|---|---|---|
| **O.S No.** | : | **1065/2004** |
| **DATE** | : | **24.04.2026** |
| **பெயர்** | : | **அல்முபாரக்** |
| **தந்தை பெயர்** | : | **பிலால் அமகது** |

**<u>வாதி தரப்பு பி.வா.சா.1 குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கில் நான் 5ம் பிரதிவாதி. 4ம் பிரதிவாதி எனது தாயார் ஆவார். நானும் 4ம் பிரதிவாதியும் 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் என்றால் சரிதான். நான் தற்போது ஒலிமுகமதுபேட்டையில் வசித்து வருகிறேன். தாவா விவரங்கள் எனக்கு தெரியும். தாவா சொத்து எந்த வருடம் யார் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியும், அந்த காலத்தில் நான் இளவர் என்றால் சரிதான். கிரையம் 2001ல் வாங்கப்பட்டது. அந்த காலகட்டத்தில் நான் எந்த பணிக்கும் செல்லவில்லை என்றால் சரிதான். எனது தாயார் 4ம் பிரதிவாதி அப்பளம் தேய்த்து கொடுக்கும் சிறு தொழில் செய்து வந்தார். எனது தந்தை 1ம் பிரதிவாதி 2001ல் நீதிமன்ற பணியில் இருந்தால் என்ன வேலை செய்தார் என்ற விவரம் தெரியாது.

2. நானும் எனது தகப்பனார், வாதி ஆகியோர் 2001ல் கூட்டு குடும்பமாக இருந்தோம் என்றால் சரியல்ல. அந்த காலகட்டத்தில் வாதி எங்களது வீட்டில் இருந்து 4 வீடுகள் தள்ளி ஒரு வீட்டில் குடியிருந்தார். நானும் எனது பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டியுடன் ஒரே வீட்டில் குடியிருந்தோம். எனது தாத்தாவும் வாதியும் கூட்டு குடும்பமாக தான் வசித்து வந்தார்கள் அந்த முகவரியை சுட்டிக் காட்டி எனது தாயாருக்கு வாதி அனுப்பிய அறிவிப்பு பற்றி எனக்கு தெரியாது. வாதி எனது தாயாருக்கு அறிவிப்பு அனுப்பிய விவரமும், எனது தாயார் அதற்கு பதில் அறிவிப்பு அனுப்பிய விவரமும் ஒரே முகவரி தான் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3. எனது பிரமாண வாக்குமூலத்தில் பதில் அறிவிப்பு பற்றி குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் அதன் விவரங்கள் எனது தாயாருக்கு தான் தெரியும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி பதில் அறிவிப்பு என்ன காரணத்திற்காக இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்ற விவரம் எனக்கு தெரியாது.2001 காலகட்டத்தில் வாதியும் அஞ்சலக துறையில் ஓட்டுநராக பணிபுரிந்து வந்தார். வாதியின் வருமாணங்கள் அனைத்தையும் எனது தாத்தாவின் குடும்பத்திற்கு தான் செலவு செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. வழக்கு சொத்து ஆதியில் எனது பாட்டனாரிடம் இருந்து கிரையம் வாங்கியதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் அதில் எனது தாத்தாவிற்கே உரிமை கிடையாது என்று சொன்னால் சரியல்ல, எனது தாத்தா அவரது தகப்பனரிடம் இருந்து கிடைக்கப்பெற்றது. எனது தாத்தாவின் தந்தைக்கே தாவா சொத்தில் உரிமை கிடையாது என்று சொன்னால் சரியல்ல. 1924ல் இருந்து எனது பாட்டனாரின் மூதாதையரிடம் இருந்து வழி வழியாக வந்த சொத்து என்றால் சரிதான். 1924 ஆவணங்களை நான் பார்த்துள்ளேன்.

5. எனது தாயார் தாவா அயிட்டம்1 சொத்தை கிரையம் வாங்கும் போது அது ஓட்டு வீடாக மண் சுவருடன் இடிந்து போகும் நிலையில் இருந்தது என்றால் சரிதான். எனது தாயார் தாவா சொத்தை பணம் கொடுத்து தான் கிரையம் வாங்கினார் என்பதை காட்டுவதற்கான ஆவணம் எதுவும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை. வெளி நபர்களிடம் இருந்து கடனாக பெற்று தான் சொத்து வாங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் அந்த விவரங்களையோ ஆவணங்களையோ இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6. தாவா சொத்து சம்மந்தமாக வாதிக்கும் அவரது தந்தைக்கும் பிரச்சனை இருந்தது அது குறித்து ஜமாத்தில் வைத்து பேசினோம் என்றால் சரிதான். அந்த ஜமாது தலைவர் பெயர் வி.கே. அப்துல் காதர் சாகிப். சாட்சியிடம் 13.09.1999

தேதியில் நடந்த பஞ்சாயத்து விவரம் என்ற ஆவணம் அசல் காட்டப்பட்டது. அதில் உள்ள கடிதத்தில் உள்ள கையெழுத்து ஜமாது தலைவர் பெயர் வி.கே. அப்துல் காதர் சாகிப் அவருடையது என்றால் சரிதான். அந்த ஆவணம் **வா.சா.ஆ–6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. சாட்சியிடம் **வா.சா.ஆ–6** ஆவணத்தில் எனது தாத்தா தாவா சொத்து அயிட்டம் 1 பூர்வீக சொத்து என்றும் அதனை தனது காலம் வரை பாராதினம் செய்ய மாட்டேன் தனது மகன்கள் அடைய வேண்டியது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் சரிதான். ஜமாத்தில் அவ்வாறு எழுதி கொடுத்துவிட்டு கிரையம் எழுதும் போது அதற்கு எனது தந்தையோ தாயாரோ ஆட்சேபனை செய்தார்களா என்றால் இல்லை. கடிதம் கொடுத்து 5 மாதங்களிலேயே எனது தாயார் பெயரில் கிரைய பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரிதான்.

8. எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது தாயாரின் நகைகளை விற்றும், சில சேமிப்புகளை எடுத்து கிரையம் வாங்கியதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளோம் அதனை நிருபிக்கும் ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. பணம் கொடுத்து கிரையம் பெற்றதை காட்டுவதற்கு எழுத்து மூலமான ஆவணம் எதுவும் கிடையாது, வாய்மொழி சாட்சியம் தான் என்றால் சரிதான். தாவா சொத்தில் நாங்கள் கட்டிடம் கட்டும் போது வாதி எனது தாயாருக்கு ஒரு அறிவிப்பு அனுப்பினார் என்று சொன்னால் சரியல்ல. அந்த அறிவிப்பிற்கு எனது தாயார் பதில் அறிவிப்பு அனுப்பினார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

9. வாதி அசல் வழக்கு எண் 179/2002 தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அந்த வழக்கு வாதியால் திரும்ப பெற்றுக் கொள்ளப்பட்டது என்ற விவரம் எனது தந்தை சொல்லி தெரியும். தாவா சொத்தில் வீடு கட்டப்பட்டது என்பதை காட்டுவதற்கு கட்டுமான அங்கிகாரம் வாங்கினோமா என்றால் மனு கொடுத்தோம் அது நிலுவையில் கொரோனா காலம் என்பதால் நிலுவையில் நின்றுவிட்டது. தாவா சொத்தை கிரையம் கொடுக்க எனது

தாத்தாவிற்கு உரிமை கிடையாது ஆகவே எனது தாயார் சொத்தில் எந்த உரிமையும் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. எனது தாத்தாவை வாதி தான் பராமரித்து வந்தார் எனது தந்தை அவருடன் அடிக்கடி சண்டை போடுவார் என்று சொன்னால் சரியல்ல.

10. நான் சொல்வது போல் எனது தாத்தாவிடம் கிரையம் வாங்கியதற்கு எந்த பிதிபலனும் கொடுக்கவில்லை அவரை ஏமாற்றி கையெழுத்து வாங்கிவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல. எனது தாத்தா தனது காலத்திற்கு பிறகு அனைத்து மகன்களும் சரிசமமாக சொத்தை அடைய வேண்டும் என்று தான் கருதியிருந்தார் அதை தான் ஜமாத்தில் எழுதி கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் பெயரில் உள்ள கிரைய பத்திரம் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. பூர்வீக சொத்து என்பதால் வாதி கோரியபடி தாவா தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. கிரைய பத்திரம் சாட்சி கையொப்பம் போட்டவர்களை விசாரிக்கிறோமா என்றால் அதை பற்றி எனது வழக்கறிஞரிடம் ஆலோசித்து தான் சொல்ல முடியும்.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை – இல்லை.**

FANNY RAJAN

Principal District Munsif, Kancheepuram
Digitally signed by FANNY RAJAN
Date: 2026.04.24 19:28:13 +0530